Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO. **434/2020**
**Depostitions of PW- 6 Witness for**

| | |
|---|---|
| Name | ஆதிசங்கர் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of November 2023.

Signature of Witness.

20.11.2023

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை–**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் NGO காலினியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 04.02.2020 அன்று நானும், தமிழரசனும் கிருஷ்ணன்கோவிலுக்கு சென்றுவிட்டு திரும்ப திருவில்லிபுத்தூருக்கு ஐஷ்வர்யா மோட்டார்ஸ் பைக் சோரூம் அருகே வந்து கொண்டிருந்தபோது போலீசார் ஆஜர் எதிரியை பிடித்தார்கள். அப்போது எதிரியை விசாரித்தபோது நாங்கள் அருகில் இருந்தோம். அப்போது எதிரியிடம் போலீசார் ஒப்புதல் வாக்குமூலம் கேட்டார்கள். எதிரி வாக்குமூலம் கொடுத்தார். எதிரி செயின் பறித்ததாகவும், அந்த செயின் பட்டத்தரசி அம்மன் கோவில் மண்டபத்தில்

இருப்பதாக சொல்லி அங்கு கூட்டிச்சென்றார். அங்கு சென்று மண்ணிற்கு கீழே புதைத்து வைக்கப்பட்டிருந்த செயினை போலீசார் எடுத்தார்கள். அதற்கு என்னிடம் சாட்சியாக கேட்டார்கள். நான் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியாக கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியல் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். என்னிடம் புகைப்படத்தில் காட்டப்படும் செயின்தான் போலீசார் கைப்பற்றினார்கள். அந்த செயின் ஏற்கனவே அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள். ( **ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3 ஆகவும், அத்தாட்சி அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.